பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை (12.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 316

## புலோலியில் நேற்றிரவு கிளைமோர் படையினர் இருவர் பலி; மூவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.12

வடமராட்சியில் புலோலியில் தெருமுடி மடத்தடியில் நேற்றிரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டதாகவும் மூவர் காயமடைந்தனர் என்றும் அறியவந்தது.

வாகன அணியை இலக்குவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும், சம்பவத்தில் படையினர் பயணம் செய்த பஸ் சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் ஒருவர் அந்த இடத்தில் கொல்லப்பட்டார் என்றும் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நான்கு சிப்பாய்களில் ஒருவர் அங்கு மரணமானார் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்த மூன்று சிப்பாய்கள் பலாலி ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர் என்றும் அறியவந்தது. (அ-1-226-218)

## வர்த்தகர் கடத்தல்; ஒருவர் சரண்!

மானிப்பாய் வீதி, ஐந்துசந்தியைச் சேர்ந்த நடராஜா சாந்தலிங்கம் (வயது 44) என்ற வர்த்தகர் நேற்றுமுன்தினம் மாலை கடத்தப்பட்டதாக மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை உயிர் அச்சுறுத்தல் காரணமாக நேற்று சங்கானை காளிகோவிலடியைச் சேர்ந்த ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்தார்.

இவரை பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-5)

# காணாமற்போனவரை மீட்டுத் தாருங்கள்!

# ஆர்பரிடம் கதறி அழுதனர் உறவினர்கள்!!

### பாதிப்புற்றோர் ஐ.நா. அலுவலகம் முன் திரண்டனர்



கொழும்பு,ஒக்ரோபர்.12

கடத்தப்பட்டும், காணாமற்போயுமுள்ள எங்கள் உறவுகளை மீட்டுத் தாருங்கள்!

ஐ.நா. ஆணையாளர் ஆர்பர் அம்மையாரிடம் கதறி அழுது இவ்வாறு கேட்டனர் பாதிக்கப்பட்ட மக்கள்.

கொழும்பில் உள்ள ஐ.நா. தூதரகத்தில் சந்திக்க வாய்ப்பளிக்கப்பட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் தமது சோக உணர்வுகளை அழுதழுது அம்மையாரிடம் கொட்டினர்.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தில் காணாமல் போனோரின் குடும்பத்தினரை லூயிஸ் ஆர்பர் நேற்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு சந்தித்துப் பேசினார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளருடன் இந்தச் சந்திப்பில் மக்கள் கண்காணிப்புக் குழுவின் சார்பில் அதன் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ். வரும் ஐ.நா. தூதுவர் பலதரப்பினரையும் சந்தித்துப் பேசுவார்



யாழ்ப்பாணம்,ஒக்.12

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான தூதர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

பலதரப்புகளுடனும் பேச்சுகளை நடத்தி குடாநாட்டின் உண்மை நிலையை அவர் அறியவிருக்கின்றார்.

விசேட விமானம் மூலம் காலை பலாலி வந்தடையும் அவரை, படைத்தளபதிகள் வரவேற்று அங்கு கலந்துரையாடல் ஒன்றை நடத்துவார்.

அதன் பின்னர், இங்குள்ள ஐ.நா. அதிகாரிகளால் நகருக்கு அழைத்துவரப்படும் அவர், யாழ். அரச அதிபர், யாழ். ஆயர் ஆகியோரைத் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடுவார்.

ஐ.நா அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் ஐ.நா. அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை ஆர்பர் அம்மையார் நடத்துவார்.

அதன் பின்னர், யாழ்ப்பாணத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளையும் ஒன்றாகச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

அதைத் தொடர்ந்து காணாமற்போனோர், கடத்தப்பட்டோர், உயிர் அச்சுறுத்தல் காரணமாகத் தஞ்சமடைந்தோர், படுகொலை செய்யப்பட்டோர் ஆகியோரின் உறவினர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவிகளை மீண்டும் ஏற்றனர் இ.தொ.காங்கிரஸ் எம்.பிக்கள் ஐவர்!

கொழும்பு, ஒக்.12

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானும் அவரது கட்சியைச் சேர்ந்த ஏனைய எம்.பிக்களும் நேற்று மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்றனர்.

ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷ கோபத்தில் ஏதோ ஏசியதை மன்னித்து, மக்களின் நன்மை கருதி மீண்டும் தாங்கள் பதவி ஏற்கின்றனர் என்று இ.தொ.காவின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள இளைஞர் சக்திவள்ம் மற்றும் சமூகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஆறுமுகன் தொண்டமானும், அஞ்சல் பிரதி அமைச்சராக எஸ். செல்லச்சாமியும், தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப் பேச்சுக்கான வழி இன்னும் திறந்தே உள்ளது

### நோர்வே விசேட தூதர் நம்பிக்கை

கொழும்பு,ஒக்.12

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வழி இன்னும் திறந்தே இருக்கிறது.

இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஜோன் ஹன்ஸன் போவர் கடந்தவாரம் ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் தாங்கள் சமாதானம் மூலம் தீர்வுகளை காணவே விரும்புகின்றனர் எனத் தெரி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசியில் பெண்களுக்கு தொல்லை கொடுத்த இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.12

தொலைபேசி மூலம் பெண்களுக்கு தொல்லைகொடுத்துவந்தவர் எனக் கூறப்படும் இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வைத்தியர் ஒருவரின் மனைவிக்குத் தொலைபேசியில் தொல்லை கொடுத்து வந்ததாகக் கூறப்படும் பிரஸ்தாப இளைஞன், நேற்று பெண்ணின் வீட்டுக்கு வந்த வேளை பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ். பொலிஸார் பிரஸ்தாப இளைஞனை யாழ். பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர்செய்தனர். அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபர் வேறு பெண்களுக்கும் தொலைபேசி மூலம் தொல்லை கொடுத்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நேர்முகப் பரீட்சை

JANASHAKTHI INSURANCE

வரையறுக்கப்பட்ட ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 14.10.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உரிய ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு: விண்ணப்பிக்கத் தவறியவர்களும் சமுகமளிக்கமுடியும்.

உதவி முகாமையாளர், ஆயுள்பிரிவு.

(சி/53948)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் **பொன்னையா மகினன்**

B.Sc.(Ceylon), M.Sc.(Carleton)

(சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் தலைவரும் கணித புள்ளிவிவரவியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

06.10.2007 அன்று கொழும்பில் க.பொ.த. (உ/த) பரீட்சை மதிப்பீட்டுப் பணிக்கு இணைக்கட்டுப்பாட்டு பரீட்சகராக (Co-Controller) சென்று அப்பணியை செவ்வனே முடித்து திரும்பி வரவிருந்த வேளையில் மரணமடைந்த எமது சக விரிவுரையாளரான அமரர் பொன்னையா மகினன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அத்துடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

(66840)

## மரண அறிவித்தல்

### திருமதி திரோபதாதேவி வைரவநாதன்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரோபதாதேவி (தேவி) வைரவநாதன் 07.10.2007 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-இராஜேஸ்வரி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் வைரவ நாதனின் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர், கொழும்பு) அன்பு மனைவியும் கணேஸ்வரன் (குமரன்-U.K), மகேஸ்வரன் (மகேஸ்-U.K) ,நளினி (வெள்ளவத்தை) ஆகியோ ரின் அன்புத் தாயும் ஞானேஸ்வரி (U.K), துஸ்யந்தி (U.K), பாஸ்கரன் (வெள்ளவத்தை) ஆகியோரின் பாசமிகு மாமியும் கரிணி, தனு ஷன், சரண்யா, பிரதீப், சிவகாமி (U.K), ராகவி, பார்கவி, பிரகவி (வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற நாகராசா, தேவராசா (இணுவில்), காலஞ்சென்ற தியாகராஜா (வீரகேசரி, கொழும்பு), காலஞ்சென்ற சகுந்தலாதேவி (கொழும்பு), பத்மாதேவி(கொழும்பு), சர்வானந்தராஜா (நீர்ப்பாசன திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் சோமசுந்தரம், இரத்தினசபாபதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (14.07.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.20, சுவிசுத்தராம றோட்,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு-06.*
தொ.பே.: 0112581718, 0722248733

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(66854)

## கைதடி முதியோர் இல்லத்திற்கு சக்கர நாற்காலி அன்பளிப்பு

கைதடி முதியோர் இல்லத்திற்கு இரண்டு சக்கர நந்காலிகள் வழங்கப்படவுள்ளன.

அமரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையினர் சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி சக்கரநாற்காலிகளை வழங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருச்சபை தலைவர் அருட்திரு கலாநிதி எஸ்.ஜெயநேசன் சக்கர நாற்காலிகளை முதியோர் இல்ல பொறுப்பதிகாரியிடம் கையளிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு ஞாயிறன்று

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்.லயன்ஸ் கழகம் நடத்தும் சிறப்பு நிகழ்வுகள் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் நடைபெற உள்ளன.

நிகழ்வில் யாழ்.லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் ரி.அன்பானந்தன் கௌரவ விருந்தினராக கலந்துகொள்வார்.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற வெள்ளைப் பிரம்பு பாவிப்பவர்கள் நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்படுவர்.

## விற்பனைக்கு

24 அடி நீளமான கடைக்குரிய அலுமினியத் தாலான சுவர் அலுமாரி அரைச் சோக்கேஸ் மற்றும் கவுண்டர் என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு:- 0779912302

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரவணமுத்து கோமளவல்லி (குஞ்சக்கா)

காரைநகர், மணற்காட்டைப் பிறப்பிடமாகவும் காரைநகர், அல்லின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ச.கோமளவல்லி 11.10.2007ல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்றவர்களான செல்வராசா (மலேசியா), தியாகராசா, டாக்டர் தெய்வேந்திராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவராணி, தேவராசா (ஆதவன் களஞ்சியம்-யாழ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் மகேஸ்வரி (ஆசிரியை-வியாவில் சைவவித்தியாசாலை)ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரசாந்தன், துவாரகன், சுதனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லின் வீதி,
காரைநகர்.

தகவல்
பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

### கார்த்திகேசு செல்வேந்திரன் (செல்வன்)



முதலாம் கட்டை, கல்வயல் சாவகச்சேரியை சேர்ந்த கார்த்திகேசு செல்வேந்திரன் 05.10.2007 வெள்ளிக் கிழமை அகால மரணமடைந்தார்

அன்னார் கார்த்திகேசு ((முன்னாள் சிமேந்துக் கூட்டுத்தாபனம் ஊழியர்) மனோன் மணி தம்பதியரின் ஏக புத்திரனும் செல்வநிதி, செல்வந்தி (மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி), செல்வவதனி, செல்வமனோயா, துசிதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சச்சிதானந்தன், யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌசிகன், நிதர்சனா, கஜானன், லக்சிகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (11.10.2007) வியாழக்கிழமை 6ம் வட்டாரம் உடப்பு, சிலாபத்தில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை அனைவரும ஏற்றுக் கொள்ளவும்

முதலாம் கட்டை,
கல்வயல், சாவகச்சேரி.
077 4163405
077 9020390

தகவல்
குடும்பத்தினர்.

## பாக்யா இசைப்பலகம்

மணியர்பதிவீதி, கொக்குவில் மேற்கு

எதிர்வரும் 21.10.2007 ஞாயிற்றுக்கிழமை விஜயதசமியாகிய நன்னாளில் இசை, இசைவாத்திய வகுப்புக்களுடன் ஓவியப் பயிற்சி வகுப்புக்களும் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

* மிருதங்கம்
* வயலின்
* புல்லாங்குழல்
* சித்திரம்
* ஓகன்
* வாய்ப்பாட்டும்பண்ணிசையும்

இன்று முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்வலாம்

விஜயதசமி அன்று காலை 8.00 மணிக்கு ஏடு தொடக்கும் வைபவம் இடம்பெறும்.

பாக்கியா காகிதாதிகள்
இல. 121 கே.கே.எஸ் வீதி
கொக்குவில்.

(66571)

தொ.பே: 0773053129

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

### புதிய மாணவர் அனுமதி - 2008

தரம் 6, தரம் 9 மாணவர்களுக்கான விண்ணப்பம் 30-10-2007 திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். **அதிபர்.**

(சி/53590)

## கண்ணீர் அஞ்சலி



யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தற்போதைய அதிபருமான **ச.சிவனேஸ்வரன்** அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சரஸ்வதி சம்பந்தசரணாலயம்

*அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். திடீரென ஏற்பட்ட இவரது இழப்பினால் துயரமடையும் அவர் தம் குடும்பத்தவர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*

**சி.பாலச்சந்திரன்,** கணித ஆசிரியர்,
(யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை).

(66855)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கணித புள்ளிவிவரவியல் துறைத் தலைவரும் முதுநிலை விரிவுரையாளருமாகிய

### பொன்னையா மகினன்

அவர்களது திடீர் மரணச் செய்தி கேட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளதுடன் அமரரின் பிரிவினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிராத்திக்கின்றோம்.

(66858)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### செல்லத்துரை பரமேஸ்வரி

தோற்றம்
30.04.1931

மறைவு
13.09.2007

திதி- துதியை

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.10.2007) சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை திருநாவலூர் தெனியம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 11மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

*ப.கோ.ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*

(சி/53949)

**குடும்பத்தினர்.**

## தூய கணிதத்தை துலங்கவைத்த பேராசானுக்கு துயர் பகிரும் சில வரிகள்



அமரர்
**P.மகினன்**

கணிதத்தின் முதல்வரி - இன்று
கடற்கரையில் காணாமற்போனதென்று
காற்றோடு வந்த சேதி
கனவாகி போகாதோ
கணிதத்தின் இமயமாம் பிரதேச வெளியில்
கரைபுரள தவழ்ந்தவரே!
கற்பிக்கும்போது கல்விக்காய்
கையடக்கத் தொலைபேசியை
கடைசிவரை ஒதுக்கி நின்றீர்
அறுபத்தொரு வயதினிலே உம் உடலை
அநாதரவாய் போட்டனரே!
பாதகர் செயல் கண்டு
பாவியர் நாம் ஏங்குகின்றோம் ஏது வழி?

**உமது மாணவர்,**
*3 ஆம் வருடம், விஞ்ஞானபீடம்.*

(66852)

## UNIVERSITY OF JAFFNA and FOJO

fojo

(Institute for Further Education for Journalists, Kalmar,Sweden)

### FACULTY OF ARTS
### MEDIA RESOURCES AND TRAINING CENTRE

### *POSTGRADUATE STUDIES IN JOURNALISM*

Applications are invited by the University of Jaffna from suitable persons,who are interested in Postgraduate Studies in Journalism in United Kingdom and India (One to UK and another to India). Media Resources and Training Centre is a joint venture of FOJO (Funded by Royal Danish,' Swedish and Norwegian Foreign Offices) and University of Jaffna'. Applicants must have:

* A basic or/and a Higher Degree.
* Publications, if any, in Journalism or Mass Communication or Media Studies .
* Good proficiency in English Language
* Working experience in Media will be preferred.

Each applicant has to prepare his/her application giving all details of him/her along with above qualifications.

The applications must reach The Senior Assistant Registrar, Faculty of Arts University of Jaffna on or before 28.10.2007.

Successful applicants must be prepared to sign an agreement with University of Jaffna. Details will be given to the suitable candidates at the Interview.

**Registrar**

(சி/53950)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2, 3, 4 எண்களில் தொடங்கும் தொலைபேசிகளுக்கும் சி.எல்.ஐ.வசதி

யாழ்ப்பாணம்,ஒக்.12

வெளியில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புக்கள் எங்கிருந்து வருகின்றன - அவற்றின் இலக்கங்கள் என்ன- என்று அறிந்துகொள்ளும் வகையில் சி.எல்.ஐ.வசதியை வழங்கும் பணி தற்சமயம் இடம்பெறுகின்றது.

சி.எல்.ஐ.வசதி பொருத்தப்படாத தொலைபேசி இலக்கங்களான - 2, 3, 4 ஆகிய எண்களில் ஆரம்பிக்கும் இலக்கங்களைக் கொண்ட தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு மாற்று இலக்கங்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாவனையாளரின் தேவை மற்றும் அவசியத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அதன் அடிப்படையில் பிராந்திய முகாமையாளர் முடிவு செய்து மாற்று இலக்கத்தை ஒதுக்கி வழங்குவார்.

ஏற்கனவே, இது குறித்து உதயனில் (08.10.2007) வெளிவந்த செய்தியை அடுத்து 2, 3, 4 எண்களில் ஆரம்பிக்கும் தொலைபேசிகளை உடையவர்கள் சி.எல்.ஐ.வசதி குறித்து விசாரித்தபோது, குழப்பமான தகவல்கள் கூறப்பட்டதாகத் தொலைபேசிப் பாவனையாளர்கள் உதயனுக்கு முறைப்பாடு செய்தனர். அதனைத் தொடர்ந்து விசாரித்தபோது -

இப்போது பிராந்திய முகாமையாளர் கொழும்பு சென்றுள்ளதால், இது தொடர்பான விவரங்களை தம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று 'ரெலிக்கொம்' நிறுவன அதிகாரியான எஸ்.ஜனார்த்தனன் நேற்றுத் தெரிவித்தார். (அ-1)

## சமயப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவசமய பாடப் பரீட்சைகளுக்கான விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளதாக சபையின் பரீட்சைச் செயலாளர் க.தில்லையம்பலம் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் காரைநகர் பிரதேசத்தில் கல்விகற்கும் மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இப் பரீட்சை நவம்பர் மாத நடுப் பகுதியில் இடம்பெற உள்ளதாகவும் இதில் அதி உயர் பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களும் பரிசில்களும் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரையில் இடம்பெறும் மணிவாசகர் விழாவின்போது வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-250)

## மழை இன்மையால் நெற்பயிர்கள் நாசம்

நவாலி,ஒக்.12

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் செய்யப்பட்டுள்ள காலபோக விதைநெல் முளைவந்துள்ள நிலையில் மழை பெய்யாமையால் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

வயல் நிலங்களில் ஈரலிப்புத் தன்மை இல்லாமையால் பயிர்கள் மேலும் வளர முடியாது கருகுகின்றன.

பல கஷ்டங்களுக்கு மத்தியில் விவசாயிகள் இந்த விதைப்பை மேற்கொண்டிருந்தனர். இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - கிணறு வசதி உள்ள விவசாயிகள் நீர்பாய்ச்சி நாற்றுமேடைகளில் இருந்து நாற்று நட்டுவருகின்றனர்.

இம்முறை பெருமளவான வயல் பிரதேசத்தில் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும் அதனால் நஷ்டமே ஏற்படப் போகின்றது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (203-100-135)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு :

**திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை**

சி.றஜித்தா (154), ந.தனுஜன் (148).

**வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை**

பி.ஜஸ்மினி (157), பா.கோமளேஸ்வரன் (153), ஏ.நேவித்தியா (151), கி.சோபனா (146).

**வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை**

ந.தனுசன் (158), நி.டிலக்சன் (144), பே.டினோஷா (141).

**வதிரி வடக்கு மெ.மி.த.க.**

யோ.பிரணவன் (179).

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

சு.ஜனிதன் (153), த.புவிந்தன் (142).

**கல்வயல் சண்முகானந்தா வித்தி.**

சி.பிரியங்கன் (156), க.காயத்திரி (145).

**நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.**

கி.மிதுஷா (147), வி.கோபிநாத் (142).

**கச்சாய் அ.த.க.பாடசாலை**

அ.அனித்தா (151).

**போக்கட்டி அ.த.க.பாடசாலை**

த.குணவதனி (142).

**மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி.**

நா.விபூசண்யா (143).

**மிருசுவில் அ.த.க.பாடசாலை**

ம.நிமல் (156).

**வரணி ம.வித்தி**

க.கிருஷன் (143).

**மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை**

ஸ்ரீ.சாருப்பிரியன் (151).

**மீசாலை கமலாம்பிகை வித்தி.**

அ.ஜெயசுதன் (156).

## சங்கானைப் பிரதேசத்தில் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை மையம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

சங்கானை, பிரதான வீதியில் 'ஏணி' என்னும் பெயரில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனை மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆரம்ப நிதியுதவியுடன் சங்கானைப் பிரதேச நலன்புரி நிலையப் பெண்களால் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கிலேயே இந்த விற்பனை மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (202)

## டெங்கு பரவுவதைத் தடுக்க ஏழாலையில் சிரமதானம்

யாழ்.குடாநாட்டில் டெங்குநோய் பரவி வருகிறது.. கடந்த ஆண்டில் ஏழாலைப் பகுதியிலும் மழை காலத்தில் பலர் வைரஸ் காய்ச் சல்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றனர்.

அதனைக் கருத்திற்கொண்டு ஏழாலை கண்ணகை அம்மன் விளையாட்டுக்கழக இளைஞர்கள் அப் பகுதியில் உள்ள பற்றைகள், புல் பூண்டுகளை அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்கள். (203-68)

## உலக்குளம் புனரமைப்பு

நவாலியில் அமைந்துள்ள உலக்குளத்தின் புனரமைப்புப் பணிகளைப் பிரதேச விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (95)

## முதுகலைமாணி பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்.பல்கலைக்கழகத்தின் முது கலைமாணி பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதுகலைமாணியில் அபிவிருத்தி, முதுகலைமாணியில் பிராந்தியத் திட்டமிடல், முதுகலை மாணியில் சனத்தொகை ஆகிய கற்கை நெறிகளுக்கு நடத்தப்பட்ட பரீட்சைகளின் முடிவுகளே வெளியிடப்பட்டுள்ளன. (95)

## நூலக விழிப்புணர்வுப் போட்டிகள் 14 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஒக்.12

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தால் நாளை சனிக்கிழமை பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவிருந்த நூலக விழிப்புணர்வுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று நூலக விழிப்புணர்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த சண்டிலிப்பாய் கோட்ட மாணவர்களுக்கான போட்டிகள் மானிப்பாய் மெமோறியலுக்கும், இராமநாதன் கல்லூரியில் உடுவில், தெல்லிப்பழைக் கோட்ட மாணவர்களுக்கான போட்டிகள் மல்லாகம் ம.வி.க்கும் மாற்றப்பட்டுள்ளன என்று நிறுவகம் அறிவித்துள்ளது. (203)

## மானிப்பாய் வைத்தியசாலை மாலையில் மட்டும் இயங்குவதால் நோயாளர்கள் சிரமம்

நாவாலி,ஒக்.12

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை தற்போது மாலையில் மட்டுமே செயற்பட்டு வருவதால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்குள்ள வைத்திய அதிகாரி காலையில் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு பதில் கடமையாற்ற செல்வதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (203-100)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் அப் பிரதேசத்தில் வதியும் பாடசாலை மாணவர்களுக்கிடையே சைவ சமயப் பண்ணிசை, மனனம், செய்முறை, பேச்சுப் போட்டிகளை நாளை சனிக்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், பாடசாலை அதிபரின் சிபார்சுடன் தமது விண்ணப்பங்களை சங்கச் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203-100)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியின் பிதாமகனும் முதற்பீடாதிபதியுமான கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனின் மணிவிழா மலரான 'காலத்தை வென்ற கமலம்' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

ஏழாலை,ஒக்.12

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் த.சிவகுமாரின் 'விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்' நூல் வெளியீட்டு விழா நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (203-45)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் சுகாதாரமும் உடற்கல்வியும், சித்திரம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

சிறுவர் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் அரசாங்க அரச தொடர்பு அலுவலர் சிக்கன சேமிப்புக் கடன் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுண்டுக்குளி கிறிஸ்தவ இளைஞர் சங்க கட்டடத்தில் தலைவர் க.இராசதுரை தலைமையில் நடைபெற இருக்கின்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதியும், சிறப்பு விருந்தினரானக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நாகேஸ்வரனும் கலந்துகொள்வர். (203-288)

## பழுதடைந்த மீன் விற்பனைக்குத்தடை

குருநகர்,ஒக்.12

யாழ்.சின்னக்கடை மீன் சந்தையில் பழுதடைந்த மீன் விற்பனை செய்யக் கூடாது என யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது.

பழுதடைந்த நிலையில் திருக்கைமீன் மற்றும் மீன் விற்பனை செய்யும் மீன் வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இச் சந்தையில் யாழ்.மாநகர சபையால் அறிவித்தல் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. (203-51)

## அனைத்துலக சித்தாந்த மாநாடு மார்ச் மாதம் தமிழகத்தில்

தமிழ்நாட்டிலுள்ள சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் மார்ச் மாதம் அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு தமிழகத்தில் நடத்தப்படவுள்ளது.

'சைவசித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்கள்' என்னும் கருப்பொருளில் நடத்தப்படவுள்ள இந்த மாநாட்டில் கலந்துகொள்ள விரும்புபவர்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகத்துடன் 91/5, சேர் சிற்றம்பலம் ஏ.காடினர் மாவத்தை, கொழும்பு2 என்ற முகவரியுடனோ 0112434990 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ 0112344720 என்ற தொலைநகல் இலக் கத்துடனோ தொடர்பு கொள்ளலாம். அல்லது மன்றத்தின் யாழ்.கிளை அலுவலகத்தில் 211/17, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.




இணுவில் இந்துக் கல்லூரியின் 143 ஆவது நிறைவு விழாவையொட்டி 'சைவப் பிரகாசம்' என்னும் நூல் வெளியீட்டுவிழா அண்மையில் கல்லூரி அதிபர் வி.சச்சி தானந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நூலை வலிகாமம் வலையக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட்டு வைக்க, அதன் முதற்பிரதியைத் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பெறுவதையும் வலிகாமம் வலைய உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா நூல் விமர்சன உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து [illegible] அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். படங்கள் - நேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்ததின வாழ்த்து




**சிறிபிரதீசன்-தர்மினி தம்பதியரின் செல்வப் புதல்வன் சியான்**

தனது முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை எல்லாம் வல்ல சிட்டிபுரம் கண்ணகி அம்மன் அருள்பெற்று சகல கலைகளும் பெற்று நீடூழி வாழ்கவென அம்மா, அப்பா, நோர்வேயில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, லண்டனில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை மற்றும் கொழும்பில் வசிக்கும் அத்தை, சித்தப்பா, சித்தி, பெரியம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சின்னத்தை, அப்பப்பா, அப்பம்மா மற்றும் அம்மம்மா, அம்மப்பா, மாமா ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

குடமியன், வரணி. (66416) திரு.திருமதி சிறிபிரதீசன்.

## வாடகைக்கு

யாழ்.சோமசுந்தரம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (கண்டி வீதிக்கு அண்மையில்)

தொடர்பு: பிற்பகல் 2 மணிக்கு பின்பும் 0777 222210

(66841)

## தவறிவிட்டது

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் பணிபுரியும் M. சிறிஸ்கந்தராசா என்பவரது தொழில் அ. அட்டை (Jop Card) 07.10.2007 அன்று இராஜவீதியில் அல்லது கே.கே.எஸ். வீதியில் தவறிவிட்டது. (NIC. No.: 692930975V) கண்டெடுத்தவர்கள் அண்மையிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியில் ஒப்படைத்துதவவும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.அலுவலகத்தைச் சேர்ந்த போ.ஸ்ரீ உதயமோகனின் மகள்

**செல்வி வேதிகா**

(யா/அருணோதயக் கல்லூரி)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று (மாவட்ட நிலை 67) சித்தியடைந்துள்ளார்.

இவரைப் பாராட்டி மேலும் பல சிறப்புகள் பெற்று பெருமை சேர்க்கவும் நலமுடன் வாழவும் வாழ்த்தி இறை அருள் வேண்டுகின்றோம்.

நண்பர்கள் - த.நா.போஜன், வே.பூபாலசிங்கம், செ.நவரத்தினம், க.கேதீஸ்வரநாதன், சி.சூரியகுமார், இ.சிறிஸ்கந்தராசா, திருமதிகள் ம.ஜெகராசா, இ.அருளானந்தம்.

(66833)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவராக 2007ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று திறமையாக சித்தியடைந்த மாணவி

**செல்வி த.தயாளினி**

அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு, மேலும் எமது பாடசாலையில் 126 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட செல்வன் கு.தர்சிகன் அவர்களையும் மேன் மேலும் கல்வியில் ஊக்கத்துடன் கற்று முன்னேற வாழ்த்துகிறோம். (66856)

அதிபர், ஆசிரியர்கள்,
யா/வரணி வடக்கு அ.த.க.பாடசாலை.

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 27.10.2007

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27.10.2007 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற வுள்ளது. சகல பெற்றோர்களும் பாதுகாவலர்களும் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செ.மன்மதராஜலிங்கம் வி.மாணிக்கம்
செயலாளர். (சி/53945) தலைவர்.

## விசேட தேவையுடைய மாணவருக்கு நிவாரணம்

வலி.வடக்கு,ஒக்.12

ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விசேட தேவைகள் உடைய மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாக சிபார்சு செய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும். (203-86)

## கண்ணீர் அஞ்சலி



யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய அதிபர்

**வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி**

அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி வேலுப்பிள்ளை தில்லைநாயகி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கொடிகாமம்.

## கண்ணீர்க் காணிக்கை

### பொன்னையா மகினன்

(சிரேஷ்ட விரிவுரையாளர், கணித புள்ளி விவரவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)



யாரோடு நோவோம்...? யார்க் கெடுத்துரைப்போம்
விதியிது என்று எப்படி மறப்போம்
கணிதத்தின் சிகாம் மகினன் ஆசானே!
கணிதத் துறையில் எம்மை வளர்த்த
மேன்மை உள்ளம் கொண்டவரே
உங்கள் நினைவில் உள்ளம் உருகிட
வழியெங்கும் விழிவைத்துக்
காத்திருக்கின்றோம்
என்றுமே ஆறாது நம் பாச உள்ளங்களின்
துயரம்.

மகினன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வருட மாணவர்கள்,
விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம். (66851)

## தென்கிழக்குப் பல்கலையில் ஜனவரி மாதம் பட்டமளிப்பு

வலி.வடக்கு,ஒக்.12

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா 2008 ஜனவரி 21ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2005ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் இடம் பெற்ற பரீட்சைகளில் சித்தி அடைந்த அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டங்கள் வழங்குவதற்கான வேண்டுகைப் படிவங்கள் பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய படிவங்களை அனுப்பிவைக்கும் படியும் மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 0672255067 இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-86)

## கண்ணீர் அஞ்சலி



விஞ்ஞான பீட கணித புள்ளி விவரவியல் துறையின் முன்னாள் தலைவரும் தற்போதைய சிரேஷ்ட விரிவுரையாளருமான

**P.மகினன்**

அவர்களின் பாதங்களுக்கு எங்கள் கண்ணீர் காணிக்கையைச் செலுத்துகின்றோம்.

நாளைய எதிர்காலம்
உன் பெயர் சொல்லுமென்று
காத்திருந்த காலங்கள்
கனவாகிப் போனதுவோ?
கணிதத்தின் வித்தைகளை
கனிவாயே சொல்லி நின்றீர்
காலனின் கைப்பிடியில்
கணக்கதுவும் தவறியதோ!

மகிமை வாய்ந்த மகினன் ஐயா -நீர்
மண்ணில் வாழ்ந்த காலம்
நினைவில் நிற்குதிங்கே ...
நாளைய வரலாற்றில்
உம்முடை திருநாமம்
கல்வெட்டாய் அமைந்தெமக்கு
உறுதுணை அளிக்கட்டும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

4ஆம் வருட கணித புள்ளிவிவரவியல் மாணவர்கள்.

(66835)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்: 19.10.2007 பி.ப. 2 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி: 24.10.2007 பி.ப. 2 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 24.10.2007 பி.ப. 2.30 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | ஆகக்குறைந்த இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இயற்கை விஞ்ஞான கட்டட கூரை புனரமைத்தல் | 15,000.00 | 500.00 | M7 |

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் அவர்களிடமிருந்து இக்ராட் பதிவுப் புத்தகத்தையும் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் மேற்குறிப்பிட்ட தொகையை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்களை *பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல.57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல்வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
10.10.2007 (சி/53940)

## கோழிக்குஞ்சு விற்பனை

புறொயிலர் குஞ்சு 20.10.2007 பெற்றுக் கொள்ளலாம். முற்பதிவு செய்யவும். எம்மிடம் குஞ்சு எடுப்பவர்களிடம் மீண்டும் கோழி எடுக்கப்படும். நல்லூர் பாம், 19,முருகேசர் லேன்.

## தவறவிடப்பட்டது

திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே கப்பல் பிரயாணத்தின் போது கறுப்பு நிற ரவலிங் பாக் ஒன்று 01.10.2007 அன்று தெல்லிப்பழையில் தவறவிடப்பட்டுள்ளது. இதற்குள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P:- 077 6128184
077 6560945.

சி.சிவசங்கர்,
66/8, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

## புத்தகம் கட்டுநர் (Book Binders)
## பணியாளரும் பயிலுநரும் தேவை

புத்தகம் கட்டுநர் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வாழும் ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாநகரசபை எல்லைக்குள் வாழும் பெண்கள் மட்டுமே பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 ★ 01 ★ 1925



மறைவு 26 ★ 09 ★ 1995

**அமரர் இராமலிங்கம் இரத்தினசிங்கம்**

திதி: பிரதமை 12.10.2007

ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும்
ஆறாது நம் துயர்.

"கூல் ஹவுஸ்"
டச்சு வீதி, உடுவில். (66847)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை அரசு ஏற்க மறுப்பதால் சுயாட்சியை நாடுகிறோம்



## • ஐ.நா. அதிகாரியிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக். 1..

''தமிழர்களுக்கான உள்ளக சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள அரசு மறுத்து வருகிறது. இலங்கையில் வடக்கு- கிழக்கு பகுதிகளையும் பௌத்த ஆதிக்கத்துக்கு உட்படுத்த அது முயற்சிக்கின்றது. இதன் காரணமாகத்தான் நாங்கள் சுயாட்சி தேவையை வலுப்படுத்த வேண்டியுள்ளது. அதனை அடைந்தே தீருவோம்''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுத் தலைவருமான இரா. சம்பந்தன் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பரிடம் வலியுறுத்தியிருக்கிறார்.

ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பரை புதன்கிழமை ஐ.நா தூதரக அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் லூயிஸ் ஆர்பரிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டிருக்கின்றனர். தமிழர் தாயகப் பிரதேசங்களை அரசு பௌத்த சிங்கள நாடாக கட்டியெழுப்ப முயல்கின்றது.

எங்களுடைய தொகுதி நாடாளு மன்ற உறுப்பினர்கள் மூவர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் மக்கள் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியத்துக்காக குரல் கொடுத்தவர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எங்களுடைய தொகுதிகளுக்குச் சென்று மக்களுக்கு சேவை புரிய முடியாத நிலைமை எமக்கு உள்ளது.

அச்சுறுத்தலுக்குப் பயந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இலங்கையை விட்டுவெளியேறியுள்ளனர். எமக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. கடத்தல்கள், காணாமற்போதல்கள், கைதுகள் என தினம் தினம் நடைபெறுகின்றன. இவ்வாறு மனித உரிமை மீறல்கள் கட்டுக்கடங்காமல் சென்ற கொண்டிருக்கின்றது.

இதனைத் தடுக்க நாங்கள் சர்வதேச சமூகத்தில் தான் தங்கியிருக்கிறோம் - இதற்குரிய காத்திரமான நடவடிக்கையினை ஐ.நா. தான் எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த அவர் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விளக்கினார். (சி)

## மிதிவெடி அகற்றியவர் காயமடைந்தார்

மிதிவெடி அகற்றும் குழுவினர், அப்பணியில் ஈடுபட்டிருந்தவேளை, ஒருவர் காயமடைந்தார்.கைதடிப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் 'டெனிஸ்' கண்ணி வெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த, ஆனைக் கோட்டையைச் சேர்ந்த இரத்தினசாமி தர்மேந்திரா (வயது - 28) என்பவரே காய மடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (1-78-15)

# அரசுடன் ஜே.வி.பி. மீண்டும் இணைந்தால் அமைச்சர்கள் தொகை 30ஆகக் குறையும்

## ஜெயராஜ் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

அரசுடன் ஜே.வி.பி. மீண்டும் இணைந்து கொண்டால் அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.பி.ஏ. ரணவீர பத்திரண அமைச்சர்களுக்கு வ்ழங்கப்பட்டுள்ள வாகனங்கள் பற்றி ஜெயராஜிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அமைச்சர் ஜெயராஜ் பதிலளித்துக்கொண்டிருந்தபோது குறுக்கீடு செய்த விமல்வீரவன்ஸ,அமைச்சர்களின்எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதன் காரணமாகவே அவர்களுக்கான வாகனச் செலவுகளும் அதிகரித்துள்ளன என்று கூறினார்.

அதற்குப் பதிலளித்த ஜெயராஜ், இந்த நிலைக்கு ஜே.வி.பி. அரசில் இருந்து விலகியமைதான் காரணம். ஜே.வி.பி. மீண்டும் அரசுடன் இணைந்தால் அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆகக் குறைக்க நடவடிக்கை எடுக்கமுடியும் - என்றார்.

அப்போது மீண்டும் குறுக்கீடு செய்த விமல், இந்த அரசு நல்ல விதமாகச் செயற்பட வேண்டும் என்பதற்காகத்தான் நாம் அரசை விட்டு வெளியேறினோம். எமக்குப் பிறகு நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்தீர்கள். அதற்கும் நாங்களா காரணம் எனக் கேட்டார். நிச்சயமாக ஜே.வி.பிதான் காரணம் என்றும் ஜே.வி.பி. மீண்டும் அரசில் இணைந்து கொண்டால் அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆகக் குறைக்கமுடியும் என்றும் ஜெயராஜ் பதிலளித்தார். (சி)

# ஜே.வி.பியுடன் ஐ.தே.கட்சி ஒருபோதும் பேசியதில்லை

## சபையில் ரணில் விளக்கம்

கொழும்பு, ஒக். 1.

ஜே.வி.பியுடன் ஐ.தே.க. இணைந்து செயற்படுவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் பேச்சு நடத்தவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐ.தே. கட்சி - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒப்பந்தம் தொடர்பாக ஜே.வி.பியால் கூறப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பியுடன் ஐ.தே.கட்சி கடந்த வருடமோ அல்லது இந்த வருடமோ எந்தவிதமான பேச்சிலும் ஈடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அரசுடன் மாத்திரம்தான் பேச்சு நடத்தினோம். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் செய்தோம். ஜே.வி.பியுடன் இணைந்து வேலை செய்ய முடியாது என்றும் அதனாலேயே ஐ.தே.கட்சியின் உதவியை நாடுவதாகவும் அரசு அப்போது எம்மிடம் சொன்னது.

சமாதானத்தை உருவாக்க எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்றே நாம் அரசுக்குச் சொன்னோம். - என்றார். (சி)

# தமிழக மீனவர்கள் மீது மீண்டும் இலங்கைக் கடற்படை தாக்குதல்!

## கண்டித்துப் போராட்டம் நடத்த ஏற்பாடு

சென்னை,ஒக்.1.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாகவும் அதனைக் கண்டித்து போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாகவும் மீனவர் சங்கங்கள் இங்கு அறிவித்துள்ளன.

இந்தியக் கடல் எல்லையில் வைத்து பத்து மீனவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து தொழில் புறக்கணிப்பில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தைக் கைவிட்டு கடந்த திங்கட்கிழமை மீண்டும் தொழில் ஈடுபட ஆரம்பித்தனர்.

அப்போது மீனவர்களை தாக்கிய இலங்கைக் கடற்படையினர் அவர்களது மீன்பிடி உபகரணங்களையும் தம்மிடம் இருந்து மீன்வகைகளையும் அபகரித்துச் சென்றனர் என்று ஐந்து மீனவர்கள் தமிழக பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவத்தைக் கண்டித்தே போராட்டம் நடத்தப்போவதாக மீனவர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. (சி)

# அதிர்கின்ற போர் அரங்குகளை வெல்வதற்கு பெண் புலிகள் தயார்!

## தமிழீழ மகளிர் நாளில் பிரகடனம்

கிளிநொச்சி, ஒக். 12

அதிர்கின்ற போர் அரங்குகளை வெல்வதற்கு மகளிர் படையினர் தயாராகின்றனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப். மாலதியின் 20 ஆண்டு நினைவுநாளை முன்னிட்டும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டும் தமிழீழ அரசியற்துறையின் மகளிர் அணியினர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்றைய மனித மேம்பாட்டுக்கான சிந்தனைகள் அனைத்தும் எமக்குமானதே என்பதனை அனைத்துலக சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு இனத்தின் வாழ்வுக்காகப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாதவரை இந்த உலக சமூகம் முழுமையான மேம்பாட்டை நோக்கியும் பயணிக்கப் போவதில்லை.

எனவேதான் எழுச்சிகொண்டு நிற்கும் தமிழீழப் பெண்ணினம் இன்றைய நாளில் சர்வதேசியம் பேசும் உலகப் பெண்ணிய வாதிகள் முன்னால் ஒரு கேள்வியை முன் வைக்கின்றது.

நாள்தோறும் ஆயிரம் ஆயிரமாக வதைப்படும் தமிழ்ப் பெண்கள், குழந்தைகளின் விடுதலை, தமிழ் மக்களின் விடுதலை என ஒட்டுமொத்தமான விடுதலையுடன் பின்னிப் பிணைந்தது.

எனவே உலக மனச்சான்றின் முன்னால் ஏன் எங்களின் அபிலாசைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

நாமாகவே எம்மை விடுவிக்கப் போராடும் நியாயத்தைப் புரிந்துகொள்ளாத உலகிடம் விடுதலைக்காக கையேந்தி நிற்பதற்கு தமிழினம் தயாராக இல்லை.

வலிமையே வாழும் என்ற வாழ்வியல் நியதியின் அடிப்படையில் தமிழீழப் போராட்டத்தோடு எம்மை இணைத்துக்கொள்ளும் போதுதான் தமிழீழப் பெண்களின் விடுதலை சாத்தியப்படும் என்பதே இப்புரட்சி நாளின் செய்தியாகும் - என்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப். மாலதியின் 20 ஆண்டு நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சிநாளும் நேற்று முன்தினம் தமிழர் தாயகப் பகுதிகளில் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன. (சி)

# பரம்பொருளை அன்னையாய் வரித்து வழிபடுவதே நவராத்திரி விரதம்

பிரபஞ்சமெங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் சக்தி வடிவாக யாவற்றிலும் வியாபித்திருப்பதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது.

ஒரு மரத்தின் வேரிலிருந்து புறப்படும் சக்தியானது இலையாகி, கிளையாகி, பூவாகி, காயாகி, கனியாகி, அம்மரத்தின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. மனிதர்கள், ஜீவராசிகள், புல் பூண்டுகள் அனைத்தினதும் தோற்றமும் வளர்ச்சியும் சக்தியின் வெளிப்பாடுகளே.



பரப்பிரம்மத்திலிருந்து வெளிப்பட்ட புருஷனும் பிரகிருதியும் பிரபஞ்சத்தில் ஜீவராசிகளையும் சடப்பொருள்களையும் தோற்றுவிக்கின்றன என்று வேதங்கள் கூறுகின்றன.

புருஷன் என்பது சடப்பொருளையும் பிரகிருதி என்பது சக்தியையும் குறிக்கின்றன.

சக்தியென்றும், மாயை என்றும், இயற்கை என்றும் விவரிக்கப்படும் பிரகிருதியானது பரம்பொருளின் சக்தியை வெளிப்படுத்தும் அம்சமாக இயங்குகிறது.

'கர்ப்பாசங்கள் எல்லாவற்றிலும் பிறக் கின்ற வடிவங்களுக்குப் பிரகிருதி தாயாகின்றார். கர்ப்பதானம் செய்யும் தந்தை நான்' (அத். 14 - சா. 4) என்று பகவான் கீதையில் கூறுகிறார்.

பரமாத்மா மூலமாகயிருந்துகொண்டு பிரகி ருதி மூலம் எல்லாவற்றையும் பரிணமிக்கச் செய்வதையே இச்சுலோகம் விளக்குகின்றது.

பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் பரப்பிரம்மத்தின் சக்திக்கு விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிக்கும், பவனைக்கும் ஏற்ப பல பரிமாணங்களைக் கொடுத்து விவரிக்கின்றனர்.

அணுசக்தி, மின்சக்தி, காந்த சக்தி, உந்து சக்தி, இயங்கு சக்தி, ஈர்ப் புச் சக்தி என்று எத்தனையோ வகை கள்.

எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம் எப்படியெப்படி எல்லாமோ பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்து எல் லாவித சக்திகளாகவும் இயங்கி வருகின்றது.

சாதாரண மனிதர்களின் சிற்றறி வுக்கு இந்த உண்மை புரியாது [illegible] இந்துசமய ரிஷிகளும், ஞானிகளும் முனிவர்களும் அந்த சக்திக்குப் பல வடிவங்களையும் நாமங்களையும் குணங்களையும் கூறி, அதை வழிபடும் நெறிமுறைகளை இந்துக்களுக்கு வகுத்துக் கொடுத்துள்ளனர்.

அணுசக்தியின் விஸ்வரூபம் வெளிப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் வசிப்பவர்கள் நாம். அடுத்த நூற்றாண்டில் அணுசக்தியையே தெய்வாம்சமாகப் போற்றிப் பேணும்காலம் வரினும் அது வியப்புக்குரியதுமல்ல. இந்துசமய கோட்பாடுகளுக்கு அது முரண்பாடானதுமல்ல.

'அன்னையாய் கண்டவர்க்கு அன்னையாய், தந்தையாய் கண்டவர்க்குத் தந்தையாய், ஆசானாய் கண்டவர்க்கு ஆசானாய், அருவமாய் காண்பவருக்கு அருவமாய், உருவமாய் காண்பவருக்கு உருவமாய், சக்தியாய், சிவமாய், நாராயணனாய், சண்முகனாக, கணபதியாய் நின்று அருள்புரியும் பரம்பொருள் ஒன்றே' என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பெற்ற தாயிடம் நாம் காணும் அன்பை வேறெவரிடமும் காணமுடியாது. தாயிடம் அன்பு செலுத்துவது இயல்பாகவும், இலகுவாகவும் ஏற்படுகிறது. தாயிடம் குழந்தை தான் விரும்புவதையெல்லாம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறது.

### ஞானக்கதிர்

இந்த மனோபாவத்தில்தான் பரம்பொருளை அன்னையாய் வரித்து வடிவம் கொடுத்து கல்விக்கு ஒரு தேவி, செல்வத்துக்கு ஒருதேவி, வீரத்துக்கு ஒரு தேவியென வழிபடுகிறோம்.

- அ. குமரகுரு (அமரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
அப்பாத்துரை நாகரத்தினம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

தோற்றம் 29.03.1929
மறைவு 26.09.2003

திதி: 12.10.2007

அவனியில் நாம் உயர வழிகள் செய்து
அல்லல் இன்றி நாம் வாழ வளங்கள் சேர்த்து
ஆளாக்கி அரவணைத்த எங்கள் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் நான்கானாலும் அழியாது எம்துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (66748)

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில்
27 . 05 . 1920



இறைவன் அடியில்
14 . 09 . 2007

மனுவேற்பிள்ளை லாசறஸ் அழகரெட்டினம்
(இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி)

"லாசறஸிடம் இயேசு மிகுந்த அன்பு கொண்டிருந்தார்" (யோ:11:6)

முத்தவனே! முத்தானவனே!
அறிவில் பெரியவனே! ஏன் மண்ணுக்குள்
குடிபுகுந்தாய்! உங்கள் இறப்பு எமக்கெல்லாம்
பெரும் இழப்பு! பாசமும் பற்றுதலையும் எமக்கு
உணர்த்தி விட்டு வேதனையையும் துன்பத்தையும்
வெறுமையையும் ஏன் எமக்குத் தந்தாய்
உங்கள் அளப்பரிய பணிகள் மறக்க முடியாதவை
மறப்போமோ நாம் இறக்கும் வரை!

(சி.53943)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (13.10.2007) சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.அடைக்கல நாயகி ஆலயத்திலும் கொழும்பு, செட்டித்தெரு, அன்னம்மாள் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

M.அந்தோனிப்பிள்ளை
குடும்பத்தினர் (சகோதரன்).

130/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## நவராத்திரி பூசைகள்

யாழ்ப்பாணம், ஒக்.12

சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி அம்பாள் ஆலய நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி விஜயதசமி தினதன்று காலை 7 மணிக்கு ஏடு தொடக்குதலும் இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.12

உரும்பிராய் கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நேற்று நவராத்திரி பூசைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.12

கச்சேரி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகல்கி இல்லத்தில் நேற்று நவராத்திரி பூசைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 21 ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.12

சிவயோக கேந்திரநிலையம் நடத்தும் நவராத்திரி விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ளது.

நிலையச் செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

* * *

யாழ்ப்பாணம், ஒக்.12

சாவகச்சேரி நகரசபை பொது நூல் நிலையங்களில் நவராத்திரி விழா இன்று ஆரம்பமாக உள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி மீசாலை பொது நூல் நிலையத்திலும், 20ஆம் திகதி நுணாவி் பொது நூல் நிலையத்திலும் 21 ஆம் தி சாவகச்சேரி பொது நூல் நிலையத்திலும் நவராத்திரி பூஜை நடத்தப்படவுள்ளது. (203-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்திலிருந்து 2007ஆம் ஆண்டு தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த



செல்வன்
ரவீந்திரன்
ஐங்கரன் - 163

செல்வி
சிறீதரன்
சாளினி - 149




மாணவர்கள் மேலும் பல சிறப்புகள் பெற்று உயர்வடையப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

(சி/53944)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
27 . 03 . 1925



ஆண்டவன் அடியில்
22 . 09 . 2006

அமரர் மாணிக்கம் வல்லிபுரம்

திதி: பிரதமை 12.10.2007

ஆண்டொன்று சென்றதம்மா
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் நாம் வாழ வழி காட்டிய தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன
அவைகள் அனைத்தும் உன் அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டு ஒன்றென்ன பல சென்றாலும்
எங்கள் விழிகளில் என்றும்
மறையாது உங்கள் முகம்!

32, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
222 3851. (66816)


குடும்பத்தினர்.

## தெருவாசகங்களின் சாபங்களும், திருவாசகங்களின் வரங்களும்

அமரர் உயர்திரு. கணபதி இராசதுரை
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1996- 2005)

சேர்ப்பு
28 . 09 . 1947

விருப்பு
12 . 10 . 2005



மனிதம் மலர்ந்துள்ள மனங்களின் இணைப்பில்
புனிதமாய்ப் பாசத்தையாசித்த பூசைக்குரியவர்
படிப்பிக்கிறவரில் பாதச்சுவடுகளில்
தலையது சாய்த்து வந்தனம் தந்தனம் வாழிய
நின்நாமம்

இயற்கை
கல்வித்துறை நிலை மயிர்க்கொட்டிப் புழுவின் சாபம்
நல்லிதயம் கொண்டவரின் கூட்டுப்புழுவின் தவம்
சொல்லிடுவோம் சிறகடிக்கும் வண்ணத்துப்பூச்சியின் வரம்
வில்லின் விரைபாணமது இலக்கைத் தாக்கும்- தீர்ப்பு

சாபம்
இலக்கற்ற மாணவரின் தேடல்
இயக்கமற்ற பெறுபேறின் உயர்ச்சி
திட்டமில்லா நிர்வாக உத்தி
அர்த்தமில்லா அதிகார ஆசை
சூழ்நிலைகள் சூது கொண்டகோலம்

தவம்
வீடு, உறவு, சொத்து, சுகம் துறந்து
சூது, சதி, சூழ்ச்சி, உமை சூழ்ந்து
கூட்டுப்புழுவாகி உள்ளே துடித்து
உரியவர் துணைதர உண்மை உயர
உறங்காத தவவலிமை கைவரப் பெற்றீர்

வரம்
இராசதுரை காலம் மத்தியின் பொற்காலம்
அவர் வழி தன்னில் இன்னும் பயணம்
மலர் தனில் மகரந்தம் வண்டால் பரவும்
மத்தியின் மைந்தர் வண்டாய் இன்று
மண்ணிற்கு உண்மைகள் உரைப்பார் நன்கு

தீர்ப்பு
அன்று தொட்டுத் தீர்ப்பெழுதும் தண்டனைகள்
நன்று எது எமக்கு எது புதிய ஜன நாயகங்கள்
குன்றுநிகர் மனவெழுச்சி கொண்ட நல் மனங்களிலே
இன்றல்ல என்றைக்கும் உங்கள் கதை பேசப்படும்.

திதி: 21.10.2007 (விஜயதசமி)

தோன்றாத் துணையான துணையானவரை
தோத்தரிக்கும் உயிர்ப்பூக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழரின் பூர்வீகத் தேசிய உரிமையை புரிந்து கொள்வதற்கு முயலுங்கள்!

முக்கியமான ஒரு கால கட்டத்தில் மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதுவர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் இலங்கைக்கு விஜயம் செய் திருக்கின்றார். மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம்பெறும் யாழ். குடாநாட்டுக்கு இன்று விஜயம் செய்யும் அவர், மனித உரிமை மீறல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்புகளின் அவலங்களை இன்று நேரில் கேட்டறிவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய தரப்புகள் தமக்கு நேர்ந்த கொடூரங்களை - கொடுமைகளை - அவலங்களை - ஆர்பர் அம்மையாருக்கு எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி, சுதந்திரமாக, சுயாதீனமாக, மனந்திறந்து எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படுமா என்பது இன்றைய சந்திப்பின்போதுதான் தெரியவரும்.

எனினும், இச்சந்தர்ப்பத்தில் யாழ். குடாநாட்டு நிலைமை குறித்து, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் ஓரிரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்துகள், ஆர்பர் அம்மையார் தமது கவனத்தில் எடுக்கவும், இவ் விவகாரத்துக்குரிய தீர்மானத்தை அவர் எடுப்பதற்கு உதவவும் பொருத்தமானவை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

கொழும்பில் ஒரு பொது நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமெரிக்கத் தூதுவர் இந்த முக்கிய கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

*''கட்டாயக் கடத்தல்களும், காணாமற்போகச் செய்தலும் தலைநகர் கொழும்பில் இப்போது குறைந்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனாலும் தலைநகருக்கு வெளியில் - குறிப்பாக யாழ். குடாநாட்டில் - நிலைமை இன்னும் மோசமாகவே உள்ளது. யாழ்ப்பாணத்தில் மனித உரிமை மீறல்கள் எல்லை மீறி இடம்பெறுகின்றன. சட்ட விரோதமான முறையில் ஆள்கள் அங்கு படுகொலை செய்யப்படுகின்றமை அங்கு தினசரி விவகாரமாகி விட்டது. இது குறித்து அமெரிக்கா ஆழ்ந்த வருத்தம் கொண்டுள்ளது.*

*''ஊடகவியலாளர்கள் - குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் - கொல்லப்படுகின்றமை கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்குப் பெரும் சவாலாக வந்துள்ளது.*

*''மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இத்தகைய மீறல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாத வகையில் விசேட சட்ட விலக்களிப்பு வசதிகளை சம்பந்தப்பட்டோருக்கு அரசு வழங்கியிருக்கின்றது என்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் குற்றம் சுமத்துகின்றனர். மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்து, உரிய சட்ட நடவடிக்கை எடுத்து, தண்டிப்பதன் மூலம் இத்தகைய மீறல்களை அரசினால் தடுத்து நிறுத்த முடியும்.'' -* என்று அமெரிக்கத் தூதுவர் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார்.

மனித உரிமை மீறல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் யாழ். குடாநாட்டில், வெளியிடங்களுக்கான தரைவழிப்பாதை அடைக்கப்பட்ட நிலையில் - பாரிய இராணுவப் பிரசன்னத்துக்கு நடுவில் - சுமார் ஐந்து லட்சம் தமிழ் மக்கள் திறந்த சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலையில் அவல வாழ்வு வாழ்கின்றார்கள். இதனால் அவர்களின் உளவுரம் தகர்ந்து, அவர்கள் மனநிலைப் பாதிப்புக்கு உள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் தலைநகர் கொழும்பில் பணிக்கு சமுகம் தந்த சமயம் மர்மமான முறை யில் காணாமற்போய் பின்னர் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதுவர் நேரில் வந்து தங்களின் அவல நிலையை நேரில் பார்வையிட வேண்டும் எனக்கோரி, வெலிக்கடை மற்றும் நியூ மகசின் சிறைச்சாலையில் உண்ணா விரதப் போராட்டத்தில் தமிழ்க் கைதிகள் குதித்திருந்த சமயத்தில் அவர்கள் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றனர்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் இலங்கையில் ஈழத் தமிழரின் பேரவல நிலைமை குறித்துத் தீர்க்கமான முடிவுகளை ஆர்பர் அம்மையார் எடுப்பதற்கு உதவும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய முடிவை எடுப்பதற்கு இலங்கை அரசின் சட்டங்களையும், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச ஏற்பாடுகள், ஒழுங்கு முறைகள், விதிகள் போன்றவற்றையும் மட்டும் ஐ.நா. மனித உரிமைகள் தூதுவர் கவனத்தில் கொண்டால் போதுமானதல்ல.

அதற்கு அப்பால், இந்த இலங்கைத் தீவில் சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே வசித்து வரும் பூர்வீகத் தேசிய இனம் என்ற ரீதியில் இலங்கைத் தமிழர்களுக்கு வழக்காறு அடிப்படையாக வரும் அடிப்படை உரிமைகளையும், அவை மீறப்படும் முறைமைகளையும் கூட அவர் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

பூர்வீகத் தேசிய இனம் என்ற முறையில் தமிழர்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமையை மறுத்து, அவர்களது தாயகத்தை அரசியல், நிர்வாக, புவியியல், பௌதீக வழிகளில் துண்டாடி, அதனை பௌத்த - சிங்களப் பிரதேச மயமாக்கும் உரிமைப்பறிப்பும் இலங்கைத் தீவில் அரங்கேறுவதை அவர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பௌத்த - சிங்களப் பேரினவாதப் பின்புலத் தளத்திலே தொடர்ந்து ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த இனவழிப்பு - இன ஒடுக்குமுறை - போக்கை ஆர்பர் அம்மையார் செம்மையாகப் புரிந்து கொள்வாராயின், தமிழர் தாயகத்தில் மோசமாகக் கட்டவிழும் மனித உரிமை மீறல்களின் சூத்திரதாரிகள் யார் என்பதையும் அவர் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

வன்முறைப் புயலாக வீசும் இந்த மனித உரிமை மீறல் செயற்பாடுகளின் நோக்கம் - இலக்கு - தமிழர்களின் ஆயுதப் போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பது மட்டுமல்ல, அந்த இயக்கம் எந்தச் சிறுபான்மை இனத்துக்கு மத்தியில் இருந்து முகிழ்ந்ததோ, அந்தச் சிறுபான்மை இனத்தையே அடியோடு அழித்து, அதன் தனித்துவமான இனத்துவ அடையாளங்களைச் சிதைப்பதும் கூடவாகும்.

இந்தப் பேரினவாத அரசியல் காழ்ப்புணர்வுப் போக்கை ஆர்பர் அம்மையார் உணர்ந்து கொள்வாராயின், இலங்கையில் மோசமாக இடம்பெறும் மனித உரிமை மீறல்களின் காத்திரத்தை - சூத்திரத்தை - அவர் இலகுவாகப் புரிந்து கொள்வது அப்படி ஒன்றும் கஷ்டமான விடயமாக இருக்காது.

# தலைமன்னாரில் கைப்பற்றிய படகுகளில் இருந்து சிறுரக விமானமும் ஹெலியும் மீட்கப்பட்டனவாம்

## கடற்படைத் தரப்பில் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.12

விடுதலைப் புலிகளினுடையவை எனக் கூறப்படும் இரு படகுகளை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைப்பற்றியதாகவும், அவற்றிலிருந்து 'ரிமோல்ட் கொன்ட்ரோல்' மூலம் இயங்கவல்ல சிறியரக விமானத்தையும்,ஹெலி கொப்டரையும் தாங்கள் மீட்டிருப்பதாகவும் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

''தலை மன்னார்க் கடற்பரப்பில் நேற்று விடிகாலை 5.30 மணியளவில் பயணித்துக் கொண்டிருந்த சிறியரக இரு படகுகளைக் கடற்படையினர் அவதானித்துத் தாக்குதல் நடத்தினர் . பின்னர் அந்துப்படகுகளும், அவற்றுக்குள்ளிருந்து சிறியரக ஹெலி மற்றும் விமானம் உட்பட வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன'' என்று கடற்படை சார்பில் பேசவல்ல அதிகாரி தெரிவித்தார்.

குறித்த இரு படகுகளிலும் 5 விடுதலைப் புலிகள் இருந்திருக்கலாம் என தெரிவிக்கும் படைத்தரப்புப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, தாக்குதலுக்குப் பின்னர் அவர்கள் பலியாகியிருக்கலாம் அல்லது கடலுக்குள் குதித்து உயிர் தப்பியிருக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

பின்னர் இரு படகுகளில் ஒன்று பாரிய சேதத்துடனும், மற்றையது சிறு சேதத்துடனும் மீட்கப்பட்டது என்றும், அவற்றிலிருந்து 'ரிமோல்ட் கொன்ட்ரோல்' மூலம் இயங்கக்கூடிய சிறியரக விமானம், ஹெலிக்கொப்டர் என்பவற்றுடன் 4 செய்மதி தொலைபேசிகள், 45 வானொலி அன்ரனாக்கள், தொலைத்தொடர்புக் கருவிகள் என இன்னோரன்ன இலத்திரனியல் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் பிரிகேடியர் தகவல் தெரிவித்தார்.

குறித்த விமானம் ஒரு அடி நீளமானது என்றும் அவர் கூறினார். (சி)

# இழுபறியில் கிடந்த நிதிச்சட்டமூலங்கள் நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றம்

கொழும்பு, ஒக். 12

நாடாளுமன்றில் கடந்த மாதம் ஐ.தே.கட்சி உறுப்பினர்களுக்கும், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்படக் காரணமாக அமைந்த - அன்று நிறைவேற்றப்பட முடியாமல் போன - சர்ச்சைக்குரிய நான்கு சட்டமூலங்களும் எதிர்க் கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் அரசின் இணக்கப்பாட்டோடு நேற்று நிறைவேற்றப்பட்டன.

கடந்தமாதம் போலநேற்றும் இந்தச் சட்டமூலங்கள் சபையில் சர்ச்சையை ஏற்படுத்தின. எதிர்க்கட்சிகள் ஒட்டு மொத்தமாக எதிர்ப்புத் தெரிவித்தன.

மீண்டும் இச்சட்டமூலங்கள் சபைக்குக் கொண்டுவரப்பட்டமை நாடாளுமன்ற நிலையியல் கட்டளையை மீறும் செயல் என்று கூறி - ஜே.வி.பியினர் சபையைவிட்டு வெளியேறினர்.

இவர்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து நான்கு சட்டமூலங்களும் குழு நிலையில் ஆராயப்பட்டு மூன்று சட்டமூலங்கள் வாக்கெடுப்பின்றியும், ஒரு சட்டமூலம் வாக்கெடுப்புடனும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பின்போது சட்டமூலத்திற்கு ஆதரவாக 98 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே எதிர்த்து வாக்களித்தது. ஐ.தே. கட்சி, உறுப்பினர்கள் சபையில் இருந்தபோதிலும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை.

சபையில் இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 09 உறுப்பினர்கள் மாத்திரம் எதிர்த்து வாக்களித்ததால் எதிராகப் பெறப்பட்ட வாக்குகளின் உண்மையான எண்ணிக்கை 09 ஆகும். ஆனால், எதிர்த்து வாக்களிக்கும் நேரத்தில் ஐ.தே.கட்சியின் பிரதான கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்புவதற்காக ஆசனத்தைவிட்டு எழுந்து நின்றமையால் அவரும் எதிர்த்து வாக்களிக்கப்பட்டோரில் சேர்க்கப்பட்டு, எதிராக அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 10 என்று சபாநாயீகரால் அறிவிக்கப்பட்டது.

இச்சட்டமூலங்கள் மீண்டும் சபைக்குக் கொண்டுவரப்பட்டமை, நிலையியல் கட்டளையை மீறும் செயல் என்பதால் நாம் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று குறித்துக் கொள்ளுங்கள் என்று ஜோசப் மைக்கல் பெரேரா சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

ஆனால், வாக்கெடுப்பின்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது என்றும் அதற்காக எழுந்துநின்றால் வாக்கெடுப்பு எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் சபாநாயகர் அறிவித்தார். (சி)

## கப்பல் பயணக் கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் கப்பலின் கட்டணம் இன்றுமுதல் அதிகரிக்கப்படுகின்றது. இத்தகவலை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கப்பலுக்கான ஒருவழிப்பயணக் கட்டணம் ரூபா 3162.50 ஆக உயர்த்தப்படுகின்றது என்று அவர் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் ஒருவழிப் பயணக் கட்டணமாக 2750 ரூபா அறவிடப்பட்டுவந்தது. (அ-1)

## கைத்தொழில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.12

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கைத்தொழில் உற்பத்திகள், கைத்தறித் துணிகள், கைப்பணிப் பொருள்களின் கண்காட்சியும் போட்டியும் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 4,மணிவரை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோரும் கலந்து கொள்வர். (1-202)

# தென்னிந்திய திருச்சபையின் வைரவிழாவையொட்டி வட்டுக்கோட்டையில் நாளை விசேட கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

தென்னிந்தியத் திருச்சபையின் வைரவிழாக் கொண்டாட்டங்கள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெறவுள்ளன.

திருச்சபையின் யாழ். மறைமாவட்டப் பேராயர் டாக்டர் டானியல் எஸ். தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மெதடிஸ்த திருச்சபையின் துணைத் தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அருளுரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து அருட்திரு கே.பி.யூ. ஜோன் தேவசகாயம், அருட்திரு. எ. றூபன்சிவநாதம், அருட்திரு. எஸ்.அரியரட்ணம் ஆகியோரை அருட்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்தும் நிகழ்வும்-

எஸ். சதீஸ்குமார், எஸ்.ஜோன் புவியரசன், பி.புனிதராஜ் ஆகியோர் உதவி அருட்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

முற்பகல் 10.30 மணிக்கு வைரவிழா நினைவு மண்டபத்தை எம்.ஏ. சுமந்திரன் திறந்துவைப்பார்.

அதைத் தொடர்ந்து தென்னிந்தியத் திருச்சபையின் வைரவிழாக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை பேராயர் தியாகராசா நடுவார். அதன் பின் பொதுக்கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். அத்துடன், சபையின் 60ஆண்டுகால வரலாற்றை எடுத்து விளக்கும் மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் ஆகியோர் விசேட செய்திகளை விடுத்து உரையாற்றுவர். (அ-1-202)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 26 | :சனிக்கிழமை |
| | 13.10.2007 |
| திதி : துதியை | பி.ப. 2.12 |
| நட்சத்திரம் : | சுவாதி |
| | மு.ப. 3.39 |
| சுபநேரம் | : 03.32 - 04.32 |
| ராகுகாலம் | : 09.02 - 10.32 |

# இடம்பெயர்ந்த, நலிவுற்ற குடும்பங்களுக்கு 15ஆம் திகதிமுதல் ஓகஸ்ட், செப். நிவாரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

இடம்பெயர்ந்த குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்களுக்கான ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய நிவாரண விநியோகம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும். அத்துடன், உலக உணவுத் திட்டத்துக்கான நிவாரண விநியோகத்தையும் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

இத்தகவலை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

மேற்படி விநியோகங்களை உடன் ஆரம்பிப்பதற்கு வசதியாக, அவற்றுக்குரிய பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை இன்று காலை 9 மணி முதல் மாவட்ட செயலகத்தில் பெற்று களஞ்சியங்களில் பொருள்களை எடுத்து விநியோகத்தை 15ஆம் திகதி ஆரம்பிக்குமாறு ப.நோ.கூ. சங்கங்களை அரச அதிபர் கேட்டுள்ளார்.

அதேவேளை -

பாடசாலை மாணவர்களுக்கான உலக உணவுத்திட்டத்தின் கல்விக்கான உணவு செயற்றிட்டத்தின் கீழ் சகல பாடசாலைகளுக்கும் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் சகல பாடசாலைகளுக்கும் இம்முறை சிவப்பு நாட்டரிசி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரம் கைதிகளும் உண்ணாவிரதத்தில் குதிப்பு!

கொழும்பு,ஒக்.12

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 28 தமிழ் அரசியல் கைதிகள் நேற்று முன்தினம் தொடக்கம் உண்ணா விரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றும் அவர்களது போராட்டம் தொடர்ந்தது.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருக்கும் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் சிறைச்சாலைக்கு வந்து தம்மைச் சந்தித்து தமது நிலைப்பாட்டினை கேட்டறிய வேண்டும் என்று கோரியே இவர்களும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை,வெலிக்கடை சிறைச்சாலையில் (சி.ஆர்.பி) தடுப்புக் காவல் முகாம்மில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் 2ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

## மாணவருக்கு பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், ஒக். 12

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 24 மாணவர்களுக்குமான பாராட்டு விழா இன்று நடைபெறுகிறது.

வித்தியாசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சி.மாதவகுமார், செ.குபேரநாதன், ஆரம்பக்கல்வி ஆலோசகர் எஸ்.தயாபர ராசா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன், மக்கள்வங்கி சுன்னாகம் கிளையின் முகாமையாளர் மா.சந்திர காந்தன், தினக்குரல் முகாமையாளர் அ.சி.நடராசா ஆகியோர் கலந்த கொண்டு பாராட்டுரைகள் நிகழ்த்துவர்.


CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
13.10.07 (Sat)
Certificate in Internet & E-Mail
Diploma in Office Management (Ms Office)
Diploma in Computer Hardware

Possible Which Impossible
மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடாத்தப்படும் சுகாதாரக் கண்காட்சியில்
Special SHOW & OFFER
Purchase one and get another one FREE
Only on 13,14 & 15-10-2007
At Manipay Ladies College
UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737

இன்று வருகிறது விற்பனைக்கு
(ஒக்ரோபர் 07 - 13)
சமஷ்டி: தலைவர் பிரபா என்றுமே அதற்கு இணங்கவில்லை
ஒரு பத்திரிகையாளரின் பட்டறிவுத் தொடர் (II)
வடக்கின் அரச நிறுவனங்களில் மீள் நியமனங்கள்
இந்தியாவின் அடுத்த பிரதமர் தயார்!
காட்டிக் கொடுப்பும் துரோகத்தனமும்
முடிவுக்கு வருகிறது மும்மூர்த்திகளின் செல்வாக்கு
மியாமி கரைதனில் சிதறிய சடலங்கள் (தொடர்கதை)
தரம் - 04 மாணவர்களுக்கான கல்விச்சுடர் (வர்ணத்தில்)
மருத்துவம், அறிவியல், சினிமா, உண்மைக் கதை மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்
உங்கள் உதயன் முகவரிடம் கேட்டு வாங்குங்கள்.
இன்று வருகிறது விற்பனைக்கு


## அமைச்சுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சராக முத்துசிவலிங்கமும், பிரதிக் கல்வி அமைச்சராக எஸ். சச்சிதானந்தனும், தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சராக எஸ். ஜெகதீஸ்வரனும் பதவியேற்றுக் கொண்டனர். நேற்றுக்காலை, சுபவேளையில் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

ஏற்கனவே அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டிருந்த இ.தொ.காவினர், ஜனாதிபதியின் சகோதரரும் சமீபத்தில் எம்.பியாக அமைச்சர் பதவி ஏற்றுக்கொண்டவருமான பஸில் ராஜபக்ஷவுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து - தமக்குத் துளியும் மரியாதை தராமல் பஸில் வாய்க்கு வந்தபடி ஏசினார் என்று கூறி - கடந்த ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தமது அமைச்சுப் பதவிகளை ராஜினாமாச் செய்திருந்தமை தெரிந்ததே. (சி)

## அமைதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கின்றனர். ஆனால், இரு தரப்பினரிடமும் பேச்சுக்களை நடத்துவதற்கான ஆர்வம் வெளிக்காட்டப்படவில்லை'' என்றும் அவர் கூறினார்.

''அரசு மற்றும் புலிகள் இரு தரப்பினருக்கும் அமைதியான தீர்வு ஒன்று தேவையாக உள்ளது. நோர்வே அரசு சமாதானத்திற்கான ஏற்பாடுகளை மாத்திரமே மேற்கொள்ளும் இருதரப்பினரும் நினைத்தால் இனியும் கூட அமைதிப் பேச்சைத் தொடங்க முடியும். அதற்கான கதவுகள் இன்னமும் திறந்தே உள்ளன'' - என்றும் அவர் கூறினார். (சி)

## தொலைபேசியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார் என விசாரணையில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட நபரிடம் கூரிய ஆயுதம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாவும், அவர் கொக்குவிலைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் பாதுகாவலர்களையும் சந்திக்க ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரியவந்தது. எனினும், எங்கு வைத்து இச் சந்திப்பு நடைபெறும் என்பது குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் நேற்றிரவுவரை கிடைக்கவில்லை. (அ-1)


சிங்களம்
(பேச, எழுத, வாசிக்க) சனி, ஞாயிறு
பிரிவு I 4-5 P.M
பிரிவு II 5-6 P.M
ஆசிரியர்: Mr.K.R. சூரி.
PAPER CLASS
ECO - Mr B கஜீதரன்
Mon.Fri 3-4 P.M
LOGIC Miss.N சசிகலா
Mon.Tue 6.15 - 7.15 A.M
SHAMROCK
நச்சமோட்டை யாழ்.

பொருளியல் - N.சுந்தா
பொருளியல் அறிமுகம்
2008 A/L
*வரை படங்கள் *கணக்குகள்
*சமன்பாடுகள் *அட்டவணைகள்
*கடந்தகால பரீட்சை வினாக்கள்
(32 Papers) (1980-2007)
Su, sun - 07.15 -8.15 am
ஆரம்பம் - 13-10-2007 7.15 am

M.G.S அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு
சிவப்பு பஷன்பிளஸ்மோட்டார் சைக்கிகள் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:-
5/3 ஆஸ்பத்திரி வீதி,மானிப்பாய்.
(மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு பின்னால் Y.M.C.A. அருகாமையில் உள்ள ஒழுங்கை)
தொ.பே:- 0775052289

S.L.A.S போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல் விற்பனையில்
ஆக்கம்:- த.தவசேகர் B.S.C, P.G.D.E, P.G.D.P
* இப் பரீட்சைக்கான வகுப்புக்கள் யாழ்பாண கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் போதனா வைத்தியசாலை முன்பாக) நடைபெறுகின்றன.
பிரிவு I ஞாயிறு 11-12 பிரிவு II புதன், வியாழன் 2.15-4.00

IIS
Computer Courses
அனேக மாணவரின் எதிர்பார்ப்புக்கு அமைய
அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான 5ஆவது புதிய பிரிவு ஆரம்பம்.
14/10/2007 பகல் 10.00 மணி
இயக்குநர், IIS,


## காணாமற்போனவரை மீட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்கிரமபாகு கருணாரத்ன உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

ஐ.நா. அலுவலகத்திற்குள் போதிய இடவசதி இன்மையால் காணாமற்போனவர்களின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பேர் இந்தச் சந்திப்பிற்காக ஐ.நா. அலுவலகத்திற்குள் செல்ல அழைக்கப்பட்டனர்.

அதன்படி தெரிந்தெடுக்கப்பட்ட 30 பேரும் ஐ.நா. மனித உரிமைகளுக்கான தூதர் லூயிஸ் ஆர்பரைச் சந்தித்துத் தமது கவலைகளை வெளியிட்டதுடன், காணாமற்போனவர்களின் உறவினர்கள் அனைவரினதும் சார்பிலான கோரிக்கைகளையும் அவரிடம் தெரிவித்தனர். காணாமற்போன உறவினர்களின் சார்பில் அவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றும் ஐ.நா. மனித உரிமைகளுக்கான தூதரிடம் மக்கள் கண்காணிப்புக் குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மேலக மக்கள் முன்னணியின் மனோ கணேசன் மற்றும் காணாமல் போனவர்களின் சார்பில் சிலரும் உரையாற்றினர். காணாமற்போனவர்களின் கண்ணீர்க் கதைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான தூதர் லூயிஸ் ஆர்பருக்கு விரிவாக விளக்கப்பட்டதாக மக்கள் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடத்தல்கள் மற்றும் கப்பம் கறக்கும் பின்னணியில் உள்ள சக்திகள் குறித்தும் இந்த விடயத்தில் அரசின் மௌனம் குறித்தும் அவருக்கு விரிவாக விளக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் விமானப் படையினரின் அலுவலகச் சுவரோடு ஒன்றித்து இருப்பதால் அங்கு கடும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. ஏராளமான விமானப்படையினர் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

## மரண அறிவித்தல்கள்

### இராசையா விமலநாதன்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா விமலநாதன் நேற்று (11.10.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா- அன்னபூரணம் தம்பதியரின் மகனும், மரியயோசப்பின் (வசந்தி) அன்புக் கணவரும், நிக்கிளாப்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் மருமகனும், தார்சில் ரிசோ (மத்திய கல்லூரி மாணவன்), மேரிசபினா கசிலினி (திருக்குடும்ப கன்னியர்மடம்)ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் அருள்நாதன், ரவீந்திரன் சறோஜாதேவி ஆகியோரின் சகோதரனும் பற்குணம், குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.10.2007) வெள்ளிக் கிழமை பி.ப 3 மணிக்கு கொய்யாய் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29/4 முதலாம் ஒழுங்கை,
பழைய பூங்கா வீதி, கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

### செல்வி கங்காதரன் தாமினி



(திருக்குடும்ப கன்னியர்மடம், சிறி சண்முகா ம.வி, திருகோணமலை, வேம்படி மகளிர் கல்லூரி, 2004 A/L, யாழ்ப்பாணம். பழையமாணவியும் உயர் தொழில்நுட்பக் கல்லூரி H.N.D.E திருநெல்வேலி முதலாம் வருட மாணவி)

2,ஆசீர்வாதம் லேன் ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கங்காதரன் தாமினி நேற்று (11.10.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கங்காதரன் (கங்கா போட்டோ)-சிறிசக்தி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும், சாளினி, தர்சி (இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(66865)

தகவல்:-
கங்காதரன் (தந்தை)

### திருமதி உமாதேவி சுதானந்தலிங்கம்



கர்ரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், 859A, கே.கே.எஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. உமாதேவி சதானந்தலிங்கம் நேற்று (11.10.2007) வியாழக்கிழமை காலை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வியும், கைலாச பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராசா-மனோன்மணி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சதானந்தலிங்கத்தின் (ராசா)மனைவியும், கமலாதேவி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி, சண்முகரத்தினம் (எரிபொருள் நிரப்பு நிலையம், காரைநகர்), நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், கமலாம்பிகை, தேவகலா, சச்சிதானந்தம் குமாரவேலு, கிருஸ்ணகுமார், டாக்டர் சற்குணலிங்கம், காலஞ்சென்ற புஸ்பராணி, லோகராணி, செல்வ மணி, சூரியகுமார் ஆகியோரின் மைத்துனியும், நவரத்தினராசா, தேவராசா, அருணகிரிநாதன், புஸ்பராணி, பத்மலோஜினி ஆகியோரின் சகலியுமாவார் .

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2007) வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

859A, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

க.சண்முகரத்தினம் (சகோதரர்)
(எரிபொருள் நிரப்பு நிலையம், காரைநகர்)

(66860)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.